# விழிப்பு

அக்கினி குஞ்சொன்று கண்டேன் அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு — தழல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ !.
- பாரதி -

மலையக மக்களின் மனித உரிமை, மனித கௌரவம்,
சமாதான சகவாழ்விற்கான உரிமை என்பவற்றை
மேம்படுத்தலுக்கும், பாதுகாப்பதற்குமான ஒரு முயற்சி .........



Villippu - பார்வை 9, 2006 - HUMAN DEVELOPMENT ORGANIZATION - HDO

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# விழிப்பின் உள்ளே.......

1. மலையக மக்களின் கொள்கைப் பிரகடனம்.
2. அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் - 1948
3. மனித உரிமைகள் பற்றிய உலகப் பிரகடனம் - உறுப்புரைகள்
4. கவிச்சோலை.
5. சுனாமி மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டின் கீழ்வாழும் விதவைப்பெண்களுக்கும் ஏனைய பெண்களுக்கும் மனித அபிவிருத்தி தாபனத்தின் வாழ்வாதார வேலைத்திட்டம்
6. HDO இன் சுனாமி மனிதாபிமான வேலைத்திட்டமும் மக்களின் பங்களிப்பும்
7. அகதிகள் என்போர் யார்?
8. சுனாமி என்றால் என்ன?

மனித அபிவிருத்தித் தாபனம் -HDO- மலையக சமூகத்தின் நிலையான அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு தனது சேவைகளை மக்களுக்கு வழங்கி வருகின்றது.

மனித உரிமைகள், மனித கௌரவம் என்பனவற்றைப் பேணுவதோடு மாற்றத் திற்கான சமூகத்தினை நோக்கியதொரு முயற்சியே விழிப்பு.

விழிப்பின் சேவை சிறப்புற வாசகர்களின் ஆக்கங்களும் விமர்சனங்களும் வழிவகுக்கும்.





ஒவ்வொருவரும் தனது நாட்டிற்குள் அல்லது நாட்டிலேயுள்ள வெவ்வேறு பிரதேசங்களுக்கு போய்வரவும், தன்னுடைய வேலைகளை செய்து கொள்ளவும் சுதந்திரமுண்டு. அதேபோல் தேவைகருதி, வேறோரு நாட்டிற்கு செல்வதற்கும் மீண்டும் தாய் நாட்டிற்கு வருவதற்கும் உரிமையுண்டு.

(உறுப்புரை 13)

ஒவ்வொருவரும் சமாதானமான முறையில் கூட்டங்கள், கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்வதற்கும், குழுக்களை உருவாக்குவதற்கும், செயல்படுவதற்கும் உரிமையுடையவர்கள். ஐக்கியமும் சமாதானமும் பேணப்படவேண்டும்.

(உறுப்புரை 20)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்களின் கொள்கைப் பிரகடனம்-2004

# National Consultation on Policy Formulation for the Development of Plantation Community in Sri Lanka

**On January 3rd & 4th, 2004**
**@ Hector Kobbekaduwa Agrarian Research & Training Institute (ARTI), Colombo - Sri Lanka.**

## முன்னுரை

மலையக சமூகம் இருநூறு வருடங்களுக்கு மேலான வரலாற்றைக் கொண்டுள்ளதுடன் இலங்கை சமுதாயத்தின் மதிப்பிற்குரியோராக இருப்பதாலும், இச்சமூகம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத பாரிய பங்களிப்பைச் செய்திருப்பதாலும், காலணித்துவ ஆட்சியின் கீழும், அதற்கு பின்னரும் இச்சமூகம் பாரதூரமான பாகுபாடு, ஒடுக்குதல், சுரண்டல்களுக்கு உட்படுத்தப்பட்டதுடன் அரசியல், சமூக, பொருளாதார, கலாசார உரிமைகளும் வாய்ப்புகளும் மறுக்கப்பட்டுள்ளமையினால் அம்மக்களுக்கு இது தொடர்பாக கட்டுக்கோப்பான ஒரு கொள்கைத்திட்டம் உருவாக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயத்தேவை என்பதை மலையகத்தின், மனித உரிமைக்கும் அபிவிருத்திக்கும் செயற்படும் கண்டி மனித அபிவிருத்தித் தாபனம் நன்கு உணர்ந்து, 2004 ஜனவரி 3ம், 4ம் திகதிகளில் கொழும்பு கொப்பேகடுவ விவசாய ஆய்வுப் பயிற்சி நிறுவகத்தில், கண்டி மனித அபிவிருத்தி தாபனத்தின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட இலங்கை மலையக சமூக அபிவிருத்திக்கான கொள்கை வகுப்பு தொடர்பான தேசிய செயற்களத்தில் பங்கேற்ற மக்கள் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், கல்வியியலாளர்கள், தொழில் வல்லுனர்கள், தொழிற்சங்கவாதிகள், சமூகத் தலைவர்கள், செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள் மற்றும் சமூக நலன் நோக்கு அமைப்புகளின் செயற்பாட்டாளர்களாகிய நாம் கீழ்வருமாறு பிரகடனப்படுத்துகின்றோம்.

## தேசிய அடையாளம்

1. இந்திய வம்சாவளியினர் என்ற இனத்துவ அடையாளத்தைக் கொண்ட மலையக சமூகத்தினர் தனித்துவமான தேசிய இனம்,

2. அனைத்து பதிவுகளிலும் மக்கள் எண்ணிக்கை, இனத்துவ பகுப்பு, அரசியல் பிரதிநிதித்துவம் போன்றவற்றிலும் அவர்கள் அவ்வாறாகவே அங்கீகரிக்கப்பட வேண்டும்.

3. அவர்கள் பாரம்பரியப் பண்பாடு, மத, கலாசார மதிப்புகளை பேணிப் பாதுகாத்துக் கொள்வதற்கும் அவற்றை அபிவிருத்தி செய்து கொள்வதற்குமான அவர்களின் உரிமை அரசியல் அமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

## நில, வீட்டு வசதிகள்

4. குடியிருப்பு, உற்பத்தி நோக்குகளுக்கான நிலத்தை அடைவதற்கான அவர்களின் உரிமை சட்டரீதியாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

5. அவர்களின் தற்போதைய காலத்திற்கொவ்வாத, சிதைவுண்ட குடியிருப்பு முறையான "லயத்துமுறை" ஒழிக்கப்பட்டு அதற்கு மாறாக புதிய குடியிருப்பு வசதித்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதுடன் வீடுகளுக்கான அவர்களின் உரித்துரிமை உத்தரவாதப்படுத்தப்படல் வேண்டும்.

## கல்வி வாய்ப்பு

6. மலையகப் பாடசாலைகளைத் தரமுயர்த்துமுகமாக, மலையக சிறுவர்களின் கல்வித்தரத்தை உயர்த்துமுகமாக, போதிய உட்கட்டமைப்புச் சேவை, உள்ளீடு முதலியவற்றுக்கான நடவடிக்கைகளை முன்னிலைப்படுத்திய சரியான செயலாற்று நோக்கைக் கொண்ட கொள்கை வகுக்கப்பட வேண்டும்.

7. மலையகப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களையோ, பாடசாலை நிர்வாகிகளையோ, ஊழியர்களையோ நியமிக்கும் போது மலையக சமூகத்தின் இன, மத, மொழி, கலாசாரப் பின்னணிகளைக் கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

8. மலையக சமூகத்திற்கு தனியான மூன்றாம் நிலைக்கல்வி நிறுவகம் அமைக்கப்படல் வேண்டும்,

9. தொழிநுட்ப, தொழிற்கல்வி வசதிகளில் மலையக சமூகத்தினருக்கு சம வாய்ப்பு அளிக்கப்படல் வேண்டும்.
10. மலையக சமூகத்தின் மீது கல்வி வாய்ப்பு தொடர்பாக திணிக்கப்பட்ட பின்தங்கிய நிலையைக் கருத்திற் கொண்டு அவர்களுக்கான சுயாதீனமாக இயங்கக் கூடியதும் சுயாதீனமாக முடிவெடுக்கக் கூடியதுமான மலையகக் கல்விச் செயலகம் ஒன்று நிறுவப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளாதார வாழ்வியல் வாய்ப்புகள்

11. மலையக சமூகத்தின் பொருளாதாரத்தின் அடித்தளமான நிலத்தை பகிர்வு செய்யும்போது அல்லது விற்கும்போது அல்லது குத்தகைக்குவிடும் போது அல்லது மாற்றுப் பயிர்ச்செய்கைத் திட்டத்தின் கீழ் கொண்டு வரும்போது குறிப்பிட்ட பெருந்தோட்டத்தை நிர்வகிக்கும் அரச நிறுவனமோ, தனியார் நிறுவனமோ அத்தகைய நிலம் சார்ந்துள்ள சூழலுக்கு எவ்விதபாதிப்பும் ஏற்படாதிருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

12. வாழ்க்கைச் செலவுப் புள்ளி உயர்வின் அடிப்படையிலும் மலையகத் தொழிலாளர்களின் வறுமையை, தங்கியிருக்கும் நிலையை, கடன்பழு மற்றும் அநாதரவான நிலையை ஒழிக்கும் தன்மையை உறுதிப்படுத்தும் வகையிலுமான வேதன முறை உடனடியாக அறிமுகம் செய்யப்பட வேண்டும்.

13. நீண்ட வேலை நேரம் உள்ளிட்ட பாரபட்சமான, எதேட்சாதிகாரமான தொழில் ரீதியான கட்டுப்பாடுகளிலிருந்து, மலையக சமூகப் பெண்கள் விடுவிக்கப்பட வேண்டும்.

14. மலையக சமூகத்தின் கடின உழைப்பின் வாயிலாகப் பெறுகின்ற இலாபத்தின் நியாயமான ஒரு பகுதியை அச்சமூகத்தின் அபிவிருத்திக்காக மலையகக் கம்பனிகள் ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

15. நட்டத்தில் இயங்கும் தோட்டக்காணிகள் அல்லது நிலங்கள் பகிர்வு செய்யும் போது அத்தகைய தோட்டங்களில் நிரந்தரமாக வசிக்கும் மலையக மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

16. அரச துறைகளில் உத்தியோகம் வழங்களில் இனவிகிதாசாரம் முக்கியமாக கவனத்தில் எடுத்து அமுல்படுத்த வேண்டும். அத்துடன் மலையக சமூகத்தின் பின்தங்கிய நிலையை முக்கியமாக கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

## சுகாதாரம், போஷாக்கு

17. தற்போதைய முறையற்ற, தரங்குறைந்த, சுகாதார மருத்துவ முறைகள் அகற்றப்பட்டு மலையகத்திற்கு தேசிய, சர்வதேச தரம் வாய்ந்த தேவைகளை நிறைவு செய்யக்கூடிய முறையொன்றினை அறிமுகம் செய்ய வேண்டும்.

18. அனைத்து மலையக சமூகம் வாழும் மாவட்டங்களுக்கும் அவர்களின் சுகாதார மருத்துவத் தேவைகளை ஈடுசெய்வதற்கும் சுகாதாரக் கோட்பாடுகளுக்கு திறமையாக முகங்கொடுப்பதற்கு கூடிய முறையில் சமத்துவமான பௌதீக, மனித, நிதி வளங்கள் பங்கீடு செய்யப்பட வேண்டும்.

19. மலையக பிள்ளைப் பராமரிப்பு நிலையப் பொறுப்பாளர், சமூக நல அதிகாரி, மருத்துவத்தாதி போன்றவர்களுக்கான நியமனங்கள் மலையக சமூகப் பின்னணியைக் கொண்டவர்களுக்கே வழங்கப்பட வேண்டும்.

20. மலையக சமூகத்தின் பிள்ளைகள், பெண்கள் மத்தியில் நிலவும் பாரதூரமான போஷாக்கின்மை தொடர்பான பிரச்சினைகளைத் தவிர்க்கும்முகமாக மலையகத்தில் உணவு, பாதுகாப்பு முறை நடைமுறைப்படுத்த வேண்டும்.

## பால்நிலை சமத்துவம்

21. பெண்ணுரிமைக்கு உரிய மதிப்பு கொடுக்கப்பட வேண்டும் என்பதுடன் குடும்பங்களிலும் சமுதாயத்திலும், பொது வாழ்க்கையிலும், அவர்களுக்குரிய பங்கு அங்கீகரிக்கப்பட வேண்டும்.

22. மலையக பெண்களின் இனவிருத்தி உரிமை அர்த்த பூர்வமானதாகவும், அவர்களின் விருப்புக்கு மாறாக அவர்கள் மீது திணிக்கப்படும் கட்டாய குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு எதிராக அவர்களின் உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

23. பெண்கள் சமத்துவ ஆற்றல்களையும், அரசியல் முடிவெடுத்தலில் அவர்களுக்கு இருக்கும் சம உரிமையை முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

24. முறைசாரா துறைகளிலும், புலம் பெயர்ந்து உள்நாட்டிற்குள்ளும், (சுதந்திர வர்த்தக வலயம்) மத்திய கிழக்கு நாடுகளிலும், வேலை செய்யும் மலையக பெண் தொழிலாளர்களுக்கும், இளம் யுவதிகளுக்கும் பாதுகாப்பு உறுதியளிக்கப்பட வேண்டும்.

## சிறுவர் உரிமைகள்

25. பிள்ளைப்பராமரிப்பு நிலைய வயதுடைய குழந்தைகளுக்கும் முன்நிலைப்பள்ளி வயதுப் பிள்ளைகளுக்கும் இடையில் ஏற்படக்கூடிய உளவியல், உடலியல் பிரச்சினைகளைத் தவிர்க்குமுகமாக குழந்தைப் பராமரிப்பு நிலையங்களும் முன்நிலைப்பள்ளிகளும் வெவ்வேறாக நிறுவப்பட வேண்டும்.

26. மலையகத்திலுள்ள முன்நிலைப்பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படும் போது மலையக சமூகத்துடன் மொழி, கலாசார, மதத்தொடர்புள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. மலையக சமூகத்தின் மத்தியில் காணப்படும் சிறுவர்களைத் தொழில்களில் ஈடுபட நிர்ப்பந்தித்தல், சிறுவர் மீதான துன்புறுத்தல் இவைகளுக்கு எதிராக திறமையான முறையில் செயற்படுவதை உறுதி செய்யும் வகையில் சிறுவர் உரிமை தொடர்பான சட்டத்தைப் பலப்படுத்த வேண்டும்.

## அபிவிருத்தி நோக்கு

28. சுயாதீனமான மலையக அதிகார சபை நிறுவப்பட வேண்டும்.

29. நாட்டில் இயங்கும் அனைத்து சிவில் அமைப்புகளும் மலையக சமூகங்களுக்கு இழைக்கப்படும் பாகுபாடுகள், வன்முறைகள் தொடர்பான பிரச்சினைகளை கையாளக்கூடிய வழிவகைகளை அவர்களின் நிகழ்ச்சி நிரல்களில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

30. அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் வறுமை ஒழிப்பு, அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி வழங்கும் நிதி முகவர் நிறுவனங்கள் மலையக சமூகத்தின் பின்தங்கிய நிலைமையை, அவர்களுக்கெதிரான பாகுபாடுகளை, சமூக ஒடுக்கு முறையைக் களைதல் முதன்மைப்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையை முன்வைக்க வேண்டும்.

31. அனைத்து சர்வதேச, தேசிய அபிவிருத்தி நிதி பங்கீடுகளினதும் நோக்கம் மலையக சமூகத்தின் சமூக, பொருளாதார நிலை மேன்மைப்படுத்தப்படுவதை உறுதி செய்வதாக அமைய வேண்டும்.

32. இலங்கையில் நிலைகொண்டிருக்கும் சிவில் அமைப்புக்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும், நிதி முகவர் நிறுவனங்களும் மலையக சமூகத்தின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதுடன் அனைத்து கொள்கை வகுப்பு, நடைமுறைப்படுத்தல் கட்டமைப்புகளிலும் அவர்களின் போதிய பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய வேண்டும்.

33. மலையக சமூகத்தின் தற்போதைய பின்தங்கிய வாழ்க்கை முறை தேசிய மட்டத்திலான அந்தஸ்தை அடையும் வரை அரசு அவர்களின் சமூக, பொருளாதார, கலாசார அரசியல் வாழ்க்கை நிலைநிறுத்தப்படுவதற்கான செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டும்.

34. தமிழ்மொழி அரச கருமமொழிகளில் ஒன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதனால், மலையக மாவட்டங்களில், அம்மொழியின் நடைமுறைப்படுத்தலை அரசாங்கம் உறுதிச்செய்யவேண்டும்.

## வாழ்க்கை, பாதுகாப்பு, சமாதானம்

35. அரசு பல்வேறு இணக்கக் குழுக்களினதும் மத்தியில் சகவாழ்வு, இணக்கம், சமாதானம் இவற்றை மேம்படுத்த வேண்டும்.

36. மலையக சமூகத்தின் மனித உரிமைப் பிரச்சினைகளை கையாள்வதற்காக மனித உரிமைகள் ஆணையத்தில் சுயாதீனமான அலகு ஒன்றை அரசு நிறுவ வேண்டும்.

37. நீதிக்கும் சமத்துவத்திற்குமான மலையக சமூகத்தின் உரிமையை மதித்து அரசு அவர்களின் மனித உரிமையை மேம்படுத்த, பாதுகாக்க சட்ட பூர்வமான அமைப்பு ஒன்றை நிறுவி அவர்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நீதியான தீர்வு கிட்டுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

## முறைசார் அல்லது முறைசாரா தொழிற்றுறைத் தொழிலாளர்களின் உரிமைகள்

38. அரசு மலையகத்திலிருந்து புலம்பெயர் தொழிலாளர்களாக மத்தியகிழக்கு நாடுகளுக்கு செல்வோர்களின் மனித உரிமை சம்பந்தமாக கவனமெடுக்க வேண்டும். மலையகத்திலிருந்து புலம்பெயர் தொழிலாளர்களாக செல்வோர் பல்வேறுபட்ட மனித உரிமை மீறல்களுக்கும், அடக்கு முறைகளுக்கும், உள்ளாவதை அறியக்கூடியதாக இருக்கின்றது. ஏனெனில் புலம்பெயர் தொழிலாளர்கள் தொடர்பாக இலங்கையிலும் ஏனைய மத்தியகிழக்கு நாடுகளிலும் போதியளவான சட்டப்பாதுகாப்போ, அவற்றுக்கான பரிகாரமோ காணப்படாமை பெருங்குறைபாடாகும்.

39. அரசு இந்திய வம்சாவளி - தமிழ் - **"நகர் சுத்திகரிப்புத் தொழிலாளர்களின்"** மனித கௌரவத்தையும் மனித உரிமையையும் மேம்படுத்தவும், பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கையின் பல்வேறு நகரங்களில் நகர் சுத்திகரிக்கும் தொழில்களில் ஈடுபட்டுவரும் இந்திய வம்சாவளியினருக்கு தொழில், வம்சாவளி, சாதி அடிப்படையில் பாகுபாடுகள் காட்டப்படுகின்றன. இவ்வடிப்படையில் இம்மக்கள் பல்வேறுபட்ட மனித உரிமை மீறல்களுக்கும் சுரண்டல்களுக்கும் உள்ளாக்கப்பட்டு வருவதுடன் சமூகப் பாதுகாப்பு, பொதுச் சேவைகள் என்பவையும் மறுக்கப்பட்டு வருகின்றன.

40. அரசு முறைசாரா தொழிற்றுறையில் ஈடுபட்டுவரும் மலையக இளைஞர் யுவதிகளின் உரிமைகளையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டும். மலையகத்தைச் சார்ந்த பெரும்பாலான இளைஞர் -யுவதிகள் சுதந்திர வர்த்தக வலயம், தனியார்த் தொழிற்றுறை மற்றும் வீடுகளில் முறைசாரா தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். இத்துறைகளில் காணப்படும் ஒழுங்கு முறையற்ற சட்டதிட்டங்களும் கொள்கைகளும் சுரண்டல்களும் இவர்களின் பல்வேறு மனித உரிமை மீறல்களுக்கு காரணமாக இருக்கின்றன. குறைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பளம், அடக்குமுறை, சம்பளமின்மை, நீண்ட நேர வேலை, பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகள் என்பன பெரும் பிரச்சினைகளாகக் காணப்படுகின்றன.

41. மலையகத்தைச் சார்ந்த பெரும்பாலானோர் தற்போது ஆசிரியத் தொழிற்றுறையிலும், அரசாங்கத்துறையிலும், தனியார் தொழிற்றுறையிலும், ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கு அபிவிருத்தி, வீடமைப்பு, பதவி உயர்வு என்பவற்றில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுவதுடன், பதவிஉயர்வு மற்றும் ஏனைய சந்தர்ப்பங்களில் இனப்பாகுபாடு காட்டப்படுகின்றது. எனவே அரசாங்கத்துறையிலும், தனியார் துறைகளிலும், தொழில் புரியும் மலையகத்தவர்களின் உரிமைகளும், மனித கௌரவமும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

## அரசியல் உரிமை

42. 20 வருட யுத்தத்திற்கு பின் சர்வதேச சமூகத்தின் மத்தியஸ்தத்தினால் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஒரு யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டு சமாதானப் பேச்சுவார்த்தையும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வருங்காலத்தில் மலையக வம்சாவளித் தமிழர்கள் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்ற வாய்ப்பு வழங்கப்படவேண்டும்.


43. இந்திய வம்சாவளி மக்களின் பாரம்பரிய கலாசார இனத்துவத்தை மேம்படுத்திக் கொள்வதற்காக இந்திய வம்சாவளித் தமிழர்கள் பிரதிநிதித்துவம் வகிக்கும் தனியான ஒரு நிர்வாக அமைப்பு முறைமை அல்லது அலகு ஏற்படுத்தப்பட வேண்டும்.

44. மலையக மக்களுக்கு மாத்திரம் **"பிரஜா உரிமைச் சான்றிதழ்"** வழங்கப்பட்டு பாகுபாடு காட்டப்படுவதுடன் இரண்டாம் தர பிரஜைகளாகக் கணிக்கப்படுகின்றனர். ஆகவே பிரஜாஉரிமை சான்றிதழ் முறை இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்றும், இலங்கையில் வாழும் அனைவரும் எதுவித பாகுபாடற்ற இலங்கை பிரஜைகளாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

45. ஊடகங்கள் மலையக மக்களுக்கெதிரான பாகுபாடுகளையும் பிரச்சினைகளையும் முக்கியப்படுத்தி வெளிக்கொணர்வதோடு, அம்மக்களின் நியாயமான உரிமைகளுக்காக அழுத்தம் கொடுத்தல் வேண்டும்.

46. தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்தல், போராட்டங்கள் நடாத்துதல் அத்தோடு தொழிற்சங்க வேறுபாடுகளின்றி தொழிலாளர்களின் உரிமைகளை வழியுறுத்தல் வேண்டும்.

47. மலையக அரசியல் கட்சிகளும் தேசிய கட்சிகளும் மலையக சமூகத்தின் உழைப்பினையும் முக்கியத்தினையும் ஆவணப்படுத்தி தக்க நடவடிக்கை எடுத்து அமுல்படுத்த வேண்டும்



**என்ற கோரிக்கைகளை**
**வலியுறுத்துகின்றோம்.**

மலையக சமூகத்தின் வரலாற்றில் முற்றிலும் புதியதொரு அணுகுமுறையான இப்பிரகடனம் மலையக மக்களின் நீண்ட கால நலன், அபிலாசைகள் மனித உரிமை, மனித கௌரவம் மீதான சிந்தனையின் ஆரம்ப கட்டமாகும். அத்துடன் இப்பிரகடனம் மலையக சமுதாயத்திற்கு தேசிய, சர்வதேச சமுதாயங்களின் அனுசரணையுடன் அவர்களின் எதிர்கால பிரச்சினைகளை நம்பிக்கையுடன் எதிர்கொள்ளும் மன வலுவையும், சவால்களையும் அளிப்பதுமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

මානව අයිතිවාසිකම් පිළිබඳ විශ්ව ප්‍රකාශනය

அனைத்துலக மனித உரிமை பிரகடனம்.

UNITED NATIONS

# UNIVERSAL DECLARATION 0F HOMAN RIGTHS

HUMAN RIGHTS

## சுதந்திர எண்ணத்திலிருந்து ....!!

அனைத்துலக மனித உரிமைகள் சாசனம் வெளியிடப்பட்டு ஏறக்குறைய அரை நூற்றாண்டை கடந்து விட்டோம். சமூக, பொருளாதார, அரசியல் பண்பாட்டுத் துறைகளிலே உலகம் பல மாற்றங்களைக் கண்டுள்ளது. உலகில் வாழும் கோடிக்கணக்கான மக்கள் இம்மாற்றங்களில் இம்மியளவேனும் நன்மைகளை அனுபவித்ததில்லை. இவர்களுக்கான சகல உரிமைகளுமே மறுக்கப்பட்ட நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். அனைத்துலக மனித உரிமைகள் சாசனம் குறிப்பிடுகின்ற,

**மனித கௌரவம் - மனித மான்மியம்**
**சுதந்திரம் - சமத்துவம் - நீதி**
**சமாதானம்,**

என்பன பற்றிய அறிவும் தெளிவும் அல்லது அவற்றை மதிக்கின்ற, மதிக்கப்படுகின்ற நிலை எவ்வளவு தூரம் சாதாரண கிராமிய ஒதுக்கப்பட்ட மக்களிடையே காணப்படுகின்றது என்பதும் கேள்விக்குறியே. மேற்படி கேள்வி என்னுள் ஏன் எழுந்தது என்றால்?

மனித அபிவிருத்தித் தாபனம் அண்மைக்காலமாக மனித உரிமைப் பற்றிய விழிப்புணர்வையும் கல்வியையும் கிராமிய, தோட்ட மக்களிடையே பரப்பி வருகின்றது. இவ்வாறான கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், பயிற்சி பட்டறைகளுக்கு சென்று வறுமைப்பட்ட மக்களுடன் இணைந்திருக்கும் பொழுது, பேசும் பொழுது அல்லது பழகும் பொழுது மேற்படி கேள்விகள் எழுகின்றன. தனிப்பட்ட மனிதர்களுக்கிடையே குடும்பங்களில் அல்லது சமூகத்தில் மனித உரிமைகள் மீறப்படும் பொழுது மக்கள் தங்களுடைய உரிமைகள் பற்றி சிலர் அறிந்திருக்க பலர் தெளிவில்லாமல் இருக்கின்றனர் அல்லது சகித்துக் கொள்கின்றனர் அல்லது அம்மனித உரிமை மீறல்களுக்கு அவர்களே காரணமாகின்றனர். இவ்வேளைகளில் மனித உரிமைகள் சாசனம் பற்றி மக்களிடம் கலந்துரையாடி, இதை இலகுபடுத்தி சாதாரண மொழிநடையில் சிறுவர்களும் பெரியவர்களும் விளங்கிக்கொள்ள கூடிய வகையில் கொண்டு செல்ல வேண்டிய தேவையும் உணர்வும் ஏற்பட்டன.


1948 டிசம்பர் 10ஆம் திகதி ஐ.நா பொதுச்சபை மனித உரிமைகள் பிரகடனத்தை வெளியிட்ட பின்பு, சபையானது நாடுகள் அல்லது ஆள்புலங்களில் அரசியல் அந்தஸ்துக் காரணமாக எவ்வித வேறுபாடு இல்லாவகையில் எல்லா பாடசாலைகளிலும், கல்வி நிறுவனங்களிலும் பரப்பவும் காட்சிக்கு வைக்கவும் அங்கத்துவ நாடுகள் யாவற்றையும் கேட்டுக் கொண்டது.

**நாம் எந்த இனத்தவராக**
**எந்த மதத்தவராக**
**எந்த நிறத்தவராக**
**எந்த நாட்டை சேர்ந்தவராக**
**எந்த மொழியைப் பேசுபவராக**
**எந்த அரசியல் பின்னணியைக்**
**கொண்டவராக**
**எந்த சமூகக் கட்டமைப்பைக்**
**கொண்டவராக இருப்பினும் சரி**

**நாம் அனைவரும் சமனானவர்கள்-**

**சுதந்திரமானவர்கள் -**
**சமவுரிமையுடையவர்கள்**

பி.பி. சிவப்பிரகாசம்
மனித அபிவிருத்தித் தாபனம்
கண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள் பற்றிய உலகப் பிரகடனம் 1948

## முகவாசகம்

1948 டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச்சபை மனித உரிமைகள் பற்றிய உலக பிரகடனத்தை ஏற்றுச் சாற்றியது. அப்பிரகடனம் கீழ்வரும் பக்கங்களில் முற்று முழுதாக தரப்படுகின்றது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அந்நடவடிக்கையின் பின்னர் சபையானது, பிரகடனத்தை வெளியிடுமாறு அவ்வாறு வெளியிடப்பட்டதை நாடுகள் அல்லது ஆள்புலங்களின் அரசியல் அந்தஸ்து காரணமாக எவ்வித வேறுபாடும் இல்லாதவகையில் எல்லா பாடசாலைகளிலும், கல்வி நிறுவனங்களிலும் பரப்பவும் காட்சிக்கு வைக்கவும் வாசிக்கச் செய்யவும், விளங்கவும் செயற்படுமாறு அங்கத்துவ நாடுகள் யாவற்றையும் கேட்டுக் கொண்டது.


## மனித உரிமைகள் பற்றிய உலகப் பிரகடனம்

## - முகவாசகம் -

மனித குடும்பத்தினைச் சேர்ந்த சகலரினதும் உள்ளார்ந்த கௌரவத்தையும் அவர்கள் யாவரதும் சமனான பாராதீனப்படுத்த முடியாத உரிமைகளையும் அங்கீகரித்தலே உலகத்தில் சுதந்திரம், நீதி, சமாதானம் என்பவற்றுக்கு அடிப்படையாக உள்ளதாதலாலும், மனித உரிமைகள் பற்றிய அசிரத்தை அவற்றை அவமதித்தலும் மனுகுலத்தின் மனசாட்சியை அவமானப்படுத்தியுள்ள காட்டுமிராண்டி தனமான செயல்களுக்கு இடமளித்துள்ளதாலும் பேச்சு சுதந்திரம், நம்பிக்கை சுதந்திரம், அச்சத்திலிருந்தும் வறுமையிலிருந்தும் விடுதலை ஆகியவற்றை மனிதன் பூரணமாக துய்க்கத்தக்க ஒரு உலகின் வருகையை சாதாரண மக்களின் மிக உயர்ந்த குறிக்கோளாக சாற்றப்பட்டுள்ளதாதலாலும், கொடுங்கோண்மைக்கும் அடக்குமுறைக்கும் எதிரான இறுதி வழியாக எதிரெழுச்சி செய்வதற்கு மனிதன் அத்தியாவசியமாக உள்ளதாதலாலும், நாடுகளிடையே நட்புறவுகளை ஏற்படுத்தப்படுவதனை மேம்படுத்துவது அத்தியாவசியமாகவுள்ளதாதலாலும், ஐக்கிய நாடுகள் சபையிற் கூடிய சகல மக்களும் பட்டயத்தில் அடிப்படை மனித உரிமைகள் பற்றிய தமது நம்பிக்கையை ஒவ்வொரு மனிதப் பிறவியினதும் கௌரவம் பெறுமதியை ஆண்பெண்ணின் சம உரிமையை மீளவலியுறுத்தி அதிசுதந்திரச் சூழலில் சமூக முன்னேற்றம் உயர்ந்த வாழ்க்கைத் தரமாகியவற்றை மேம்படுத்தத் துணிந்துள்ளரா தலாலும், மனித உரிமைகள் அடிப்படை சுதந்திரங்களுக்காக உலக மதிப்பையும் அனுட்டானத்தையும் மேம்படுத்தலை ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் கூட்டுறவுடன் முற்றுமுழுதாகச் செயல் நிலைப்படுத்த அங்கத்துவ நாடுகள் சூளுறுதி கொண்டுள்ளனவதாதலாலும், இச்சூளுறுதியைப் பரிபூரணமாக நடைமுறைப்படுத்துவதற்கு இவ்வுரிமைகள் சுதந்திரங்கள் பற்றிய பொது விளக்கமிருத்தல் முக்கியமுடையதாதலாதலும், இப்பொழுது :

## பொதுச்சபை பிரகடனப்படுத்துவதாவது:

சமூகத்தின் ஒவ்வொரு தனி மனிதனும் ஒவ்வொரு சாதனமும், இப்பட்டயத்தை இடையறாது மனத்திலிருத்தி இவ்வுரிமைகள் சுதந்திரங் களுக்கான மதிப்பினை மேம்படுத்துவதற்குக் கற்பித்தல் மூலமும் கல்வி மூலமும் தேசிய சர்வதேசிய நிலைப்பட்ட நடவடிக்கைகள் மூலமும், முயலும் நோக்கிற்காகவும் அங்கத்துவ நாடுகள் ஒவ்வொன்றும் தத்தம் மக்களிடையேயும் அத்துடன் தங்கள் நியாயாதிக்கத்தின் கீழ்வரும் ஆள்புலத்து மக்களிடையேயும் இவ்வுரிமைகள் சுதந்திரங்கள் முழு மொத்தமாக வலிவும் பயனுறுதிப்பாடுமுடைய முறையில் ஏற்கப்பெற்று அனுட்டிக்கப்படுவதை நிலைநிறுத்துவதற்காகவும் பயன்படத்தக்க சகல மக்களும் நாட்டினங்களும் தத்தமது சாதனையிலக்கின் பொது அமைப்பாகக் கொள்ளத்தக்க இந்த மனித உரிமை உலக பொதுப் பிரகடனத்தைப் பொதுச்சபையானது எடுத்துச் சாற்றுகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள் பற்றி உலகப் பிரகடனம் - 1948

உறுப்புரை - 1

மனித பிறவியினர் சகலரும் சுதந்திரமாகவே பிறக்கின்றனர். அவர்கள் மதிப்பிலும் உரிமைகளிலும் சமமானவர்கள். அவர்கள் நியாயத்தையும் மனச்சாட்சியையும் இயற்பண்பாகப்பெற்றவர்கள். அவர்கள் ஒருவருடனொருவர் சகோதர உணர்வுப்பாங்கில் நடந்து கொள்ளல் வேண்டும்.

உறுப்புரை - 2

இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல், அல்லது வேறு அபிப்பிராயமுடைமை, தேசிய அல்லது சமூகத்தோற்றம், ஆதனம் பிறப்பு அல்லது பிற அந்தஸ்து என்பன போன்ற எத்தகைய வேறுபாடுமின்றி, இப்பிரகடனத்தில் தரப்பட்டுள்ள எல்லா உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் எல்லோரும் உரித்துடையவராவர். மேலும் எவரும் அவருக்குரித்துள்ள நாட்டின் அல்லது ஆள்புலத்தின் அரசியல், நியாயாதிக்க அல்லது நாட்டை அந்தஸ்தின் அடிப்படையில் அது தனியாட்சி நாடாக, நம்பிக்கைப் பொறுப்பு நாடாக தன்னாசியற்ற நாடாக அல்லது இறைமை வேறேதேனும் வகையில் மட்டுப்படுத்தப்பட்ட நாடாக இருப்பினுஞ்சரி வேறுபாடெதுவும் காட்டப்படுதலாகாது.

உறுப்புரை - 3

வாழ்வதற்கும் சுதந்திரத்தையுடையதாயிருந்தற்கும், பாதுகாப்பிற்கும் சகலரும் உரிமையுடையோராவார்.

உறுப்புரை - 4

எவரும் அடிமையாக வைத்திருக்கப்படுதலோ, அடிமைப்பட்ட நிலையில் வைத்திருக்கப்படுதலோ ஆகாது. அடிமை நிலையும் அடிமை வியாபாரமும் அவற்றில் எல்லா வகைகளிலும் தடை செய்யப்படுதல் வேண்டும்.



உறுப்புரை - 5

எவரும் சித்திரவதைக்கோ, கொடுமையான, மனிதத்தன்மையற்ற அல்லது இழிவான நடைமுறைக்கோ, தண்டனைக்கோ உட்படுத்தப்படுதல் ஆகாது.

உறுப்புரை - 6

ஒவ்வொருவரும் எவ்விடத்திலும் சட்டத்தின் முன்னர் ஓர் ஆளாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு உரிமையுடையவராவர்.

உறுப்புரை - 7

எல்லோரும் சட்டத்தின் முன்னர் சமமானவர்கள் பாரபட்சம் எதுவுமின்றிச் சட்டத்தின் முன் சமமான பாதுகாப்புக்கும் உரித்துடையவர்கள். இப்பிரகடனத்தை மீறிப் புரியப்பட்ட பாரபட்டசம் எதற்கேனும் எதிராகவும் அத்தகைய பாரபட்சம் காட்டுவதற்கான தூண்டுதல் யாதேனுக்கும் எதிராகவும் எல்லோரும் சமமான பாதுகாப்புக்கு உரித்துடையவர்கள்.

உறுப்புரை - 8

அவ்வந் நாட்டின் அரசியலமைப்பினால், அல்லது சட்டத்தினால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் மீறும் செயல்களுக்காகத் தகுதிவாய்ந்த தேசிய நியாய சபைகளினால் வழங்கப்படும் பயனுறுதியுடைய பரிகாரத்துக்கு உரிமையுடையவர்கள்.

உறுப்புரை - 9

ஒருதலைப்பட்ட மனப்போக்கான வகையில் கைது செய்யப்படுதல், தடுத்து வைக்கப்படுத்தல், நாடுகடத்தல் ஆகியவற்றுக்கு எவரும் ஆட்படுத்தப்படலாகாது.

உறுப்புரை - 10

அவர்களது உரிமைகள், கடப்பாடுகள் பற்றியும் அவர்களுக்கெதிராகவுள்ள குற்றவியல் குற்றச்சாட்டுக்கள் பற்றியும் தீர்மானிப்பதற்கு சுயாதீனமான நடுநிலை தவறாத நியாய சபையினால் செய்யப்படும் நீதியான பகிரங்கமான விசாரணைக்கு ஒவ்வொருவரும் உரிமையுடையவர்களாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறுப்புரை - 11

(1) தண்டனைக்குரிய தவறுக்குக் குற்றஞ் சாட்டப்படும் எல்லோரும், பகிரங்க விளக்கத்தில் சட்டத்துக்கிணங்க அவர்கள் குற்றவாளிகளென காண்பிக்கப்படும் வரை, சுற்றவாளிகளென ஊகிக்கப்படுவதற்கு உரிமையுடையவர்கள். அவ்விளக்கத்தில் அவர்களது எதிர்வாதங்களுக்கு அவசியமான எல்லா உறுதிப்பாட்டு உத்தரவாதங்களும் அவர்களுக்கிருத்தல் வேண்டும்.

(2) தேசிய, சர்வதேசிய நாட்டிடைச்சட்டத்தின் கீழ் ஏதேனும் செயல் அல்லது செய்யாமை புரியப்பட்ட நேரத்தில் அச்செயல் அல்லது செய்யாமை தண்டனைக்குரிய தவறொன்றாக அமையாததாகவிருந்த அச்செயல் அல்லது செய்யாமை காரணமாக, எவரும் ஏதேனும் தண்டகைக்குரிய தவறுக்குக் குற்றவாளியாகக் கொள்ளப்படலாகாது. அத்துடன், தண்டனைக் குரிய தவறு புரியப்பட்ட நேரத்தில் ஏற்புடையதாகவிருந்த தண்டத்திலும் பார்க்க கடுமையான தண்டம் விதிக்கப்படலாகாது.

## உறுப்புரை - 12

ஒவ்வொருவரும் அவ்வவரது அந்தரங்கத்துவம், குடும்பம், வீடு அல்லது கடிதப் போக்குவரத்து என்பவை சம்பந்தமாக, ஒரு தலைப்பட்ட மனப்போக்கான வகையில் தலையிடப்படுவதற்கோ, அவரது மரியாதை, நன்மதிப்பு என்பவற்றின் மீதான தாக்குதல்களுக்கோ உட்படுத்தலாகாது. அத்தகைய தலையீட்டுக்கு அல்லது தாக்குதல்களுக்கெதிராக, ஒவ்வொருவரும் சட்டப் பாதுகாப்புக்கு உரிமையுடையவராவர்.

## உறுப்புரை - 13

(1) ஒவ்வொரு நாட்டினதும் எல்லைகளுக்குள் சுதந்திரமாகப் பிரயாணஞ் செய்வதற்கும் வதிவதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

(2) தனது சொந்த நாடு உட்பட்ட ஏதேனும் நாட்டை விட்டுச் செல்லவும் தத்தமது நாட்டுக்குத் திரும்பவும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

## உறுப்புரை - 14

(1) வேறு நாடுகளுக்குச் செல்வதன் மூலம் துன்புறுத்தலிலிருந்து புகலிடம் நாடுவதற்கும் துன்புறுத்தலிலிருந்து புகலிடம் துய்ப்பதற்கும் எவருக்கும் உரிமையுண்டு.

(2) அரசியற்குற்றங்கள் அல்லாத குற்றங்கள் சம்பந்தமாகவும், அல்லது ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்களுக்கும் நெறிகளுக்கும் முரணான செயல்களிலிருந்து உண்மையாக எழுகின்ற வழக்குத் தொகுப்புகள் சம்பந்தமாகவும் இவ்வுரிமை கேட்டுப் பெறப்படலாகாது.

## உறுப்புரை – 15

(1) ஒரு தேசிய இனத்தினராகவிருக்கும் உரிமை ஒவ்வொருவருக்குமுண்டு.

(2) எவரினதும் தேசிய இனத்துவம் மனப்போக்கான வகையில் இழப்பிக்கப்படுவதோ, தேசிய இனத்துவத்தை மாற்றுவதற்கான உரிமை மறுக்கப்படுதலோ ஆகாது.

## உறுப்புரை – 16

(1) முழுவயதடைந்த ஆண்களும், பெண்களும், இனம், தேசிய இனம் அல்லது சமயம் என்பன காரணமாக கட்டுப்பாடெதுவுமின்றி திருமணம் செய்வதற்கும் ஒரு குடும்பத்தை உருவாக்குவதற்கும் உரிமை உடையவராவர். திருமணஞ் செய்யும் பொழுதும் திருமணமாகி வாழும் பொழுதும் திருமணம் குலைக்கப்படும் பொழுதும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் சம உரிமையுண்டு.

(2) திருமணம் முடிக்கவிருக்கும் வாழ்க்கைத் துணைவோரின் (பெண், ஆண் இருவரதும்) சுதந்திரமான முழுச்சம்மதத்துடன் திருமணம் முடிக்கப்பட வேண்டும்.

(3) குடும்பமே சமுதாயத்தில் இயற்கையானதும் அடிப்படையானதுமான அலகாகும். அது சமுதாயத்தினாலும் அரசினாலும் பாதுகாக்கப் படுவதற்கு உரித்துடையது.

## உறுப்புரை – 17

(1) தனியாகவும் வேறொருவருடன் கூட்டாகவும் ஆதனத்தைக் சொந்தமாக வைத்திருப்பதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

(2) எவரினதும் ஆதனம் ஒருதலைப்பட்ட மனப்போக்கான வகையில் இழக்கப்படுதல் ஆகாது.

## உறுப்புரை – 18

சிந்தனை சுதந்திரம், மனச்சாட்சி சுதந்திரம், மதச் சுதந்திரம் என்பவற்றுக்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. இவ்வுரிமையினுள் ஒருவர் தமது மதத்தை அல்லது நம்பிக்கையை மாற்றுவதற்கான சுதந்திரம், போதனை, பயில்நெறி, வழிபாடு, அநுட்டானம் என்பன மூலமும் தத்தமது மதத்தை அல்லது நம்பிக்கையைத் தனியாகவும், வேறொருவருடன் கூடியும் பகிரங்கமாகவும் தனிப்பட்ட முறையிலும் வெளிப்படுத்துவதற்கான சுதந்திரமும் அடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறுப்புரை – 19

கருத்துச் சுதந்திரத்துக்கும் பேச்சுச் சுதந்திரத்துக்கும் எவருக்கும் உரிமையுண்டு. இவ்வுரிமையானது தலையீடின்றிக் கருத்துக்களைக் கொண்டிருத்தற்கும் எவ்வழிவகைகள் மூலமும், எல்லைகளைப் பொருட்படுத்தாமலும், தகவல்களையும், கருத்துக்களையும், நாடுவதற்கும், பெறுவதற்கும் பரப்புவதற்குமான சுதந்திரத்தையும் உள்ளடக்கும்.

## உறுப்புரை – 20

(1) சமாதான முறையில் ஒன்று கூடுவதற்கும் இணைவதற்குமான சுதந்திரத்துக்கு உரிமையுண்டு.

(2) ஒரு கழகத்தினைச் சேர்ந்தவராக இருப்பதற்கு எவரும் கட்டாயப்படுத்தப்படலாகாதது.

## உறுப்புரை – 21

(1) ஒவ்வொருவருக்கும் தத்தம் நாட்டின் ஆட்சியில் நேரடியாகவோ, சுதந்திரமான முறையில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகவோ பங்குபெறுவதற்கு உரிமையுண்டு.

(2) ஒவ்வொருவருக்கும் தத்தமது நாட்டிலுள்ள அரசாங்க சேவையில் சமமானமுறையில் அமர்த்தப்படுவதற்கு உரிமையுண்டு.

(3) மக்களின் விருப்பே அரசாங்க அதிகாரத்தின் அடிப்படையாக அமைதல் வேண்டும். இவ்விருப்பமானது காலாகாலம் உண்மையாக நடைபெறும் தேர்தல்கள் மூலம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். இத்தேர்தல் பொதுவானதும் சமமானதுமான வாக்களிப்புரிமை மூலமே இரத்தல் வேண்டுமென்பதுடன், இரகசிய வாக்குமூலம் அல்லது அதற்குச் சமமான, சுதந்திரமான வாக்களிப்பு நடைமுறைகள் நடைபெறுதல் வேண்டும்.

## உறுப்புரை – 22

சமுதாயத்தின் உறுப்பினர் என்ற முறையில் ஒவ்வொருவரும் சமூகப்பாதுகாப்புக்கு உரிமையு டையவர். அத்துடன் தேசிய முயற்சி மூலமும் சர்வதேசிய நாட்டிடை ஒத்துழைப்பு மூலமும் ஒவ்வொரு நாட்டினதும் அமைப்பு முறைக்கும் வளங்களுக்கும் இயையவும் ஒவ்வொருவரும் தத்தம் மதிப்புக்கும் தத்தம் ஆளுமையைச் சுதந்திரமான முறையில் அபிவிருத்தி செய்வதற்கும் இன்றியமையாதவையாக வேண்டப்பெறும் பொருளாதார சமூக பண்பாட்டு உரிமைகளைப் பெறுவதற்கும் உரித்துடையவராவர்.

## உறுப்புரை – 23

(1) ஒவ்வொருவரும் தொழில் செய்வதற்கான, அத் தொழிலினைச் சுதந்திரமான முறையில் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கான செய்யுந் தொழிலில் நியாயமானதும் அநுகூலமுடை யதுமான தொழில் நிபந்தனைகற்கு உரியோராயிருப்பதற்கான, தொழிலின்மைக் கெதிரான பாதுகாப்பு உடையோராயிருப்பதற்கான உரிமையை உடையவர்.

(2) ஒவ்வொருவரும் வேறுபாடெதுவுமின்றி, சமமான தொழிலுக்குச் சமமான சம்பளம் பெறுவதற்கு உரித்துடையவராவர்.

(3) வேலை செய்யவும் ஒவ்வொருவரும் தரமும் தமது குடும்பத்தினரும் மனித மதிப்புக்கியையவுள்ள ஒரு வாழ்க்கையை நடத்துவதனை உறுதிப்படுத்தும் நீதியானதும் அனுகூலமானதுமான ஊதியத்திற்கு உரிமையுடையோராவர். அவசியமாயின் இவ்வூதியம் பிற சமூகப் பாதுகாப்பு வழிமுறைகளினால் குறை நிரப்பப்படுவதா யிருத்தல் வேண்டும்.

(4) ஒவ்வொருவருக்கும் தத்தம் நலன்களைப் பாதுகாப்பதற்கெனத் தொழிற்சங்கங்களை அமைப்பதற்கும், அவற்றில் சேர்வதற்குமான உரிமையுண்டு.

## உறுப்புரை – 24

இளைப்பாறுகைக்கும் ஓய்விற்கும் ஒவ்வொருவரும் உரிமையுடையவர். இதனுள் வேலை செய்யும் மணித்தியால வரையறை சம்பளத்துடனான காலாகால விடுமுறைகள் அடங்கும்.

## உறுப்புரை – 25

(1) ஒவ்வொருவரும் உணவு, உடை, வீட்டு வசதி, மருத்துவக் கவனிப்பு அவசியமான சமூக சேவைகள் என்பன உட்பட தமதும், தமது குடும்பத்தினரதும் உடனலத்துக்கும், நல் வாழ்வுக்கும் போதுமான வாழ்க்கைத் தரத்திற்கு உரிமையுடையவராவர். அத்துடன் வேலையின்மை, இயலாமை, கைம்மை, முதுமை காரணமாகவும் அவை போன்ற அவரது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட பிற சூழ்நிலை காரணமாகவும் வாழ்க்கை வழியில்லாமை ஏற்படும் சந்தர்ப்பங்களில் பாதுகாப்பக்கும் உரிமையுடையவராவர்.

(2) தாய்மை நிலையும் குழந்தைப்பருவமும் விசேட கவனிப்பிற்கும் உதவிக்கும் உரித்துடையன. சகல குழந்தைகளும், அவை திருமண உறவிலும் பிறந்தவையாயினும் சரி, அத்தகைய உறவின்றி பிறந்தவையாயினும் சரி சமமான சமூகப் பாதுகாப்பினைத் துய்க்கும் உரிமையுடையன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உறுப்புரை — 26

(1) ஒவ்வொருவருக்கும் கல்வி கற்பதற்கான உரிமையுண்டு. குறைந்தது தொடக்க அடிப்படைக் கட்டங்களிலாவது கல்வி இலவசமானதாகயிருத்தல் வேண்டும். தொடக்க கல்வி கட்டாயமாக்கப்படுத்தல் வேண்டும். தொழினுட்பக் கல்வியும் உயர் தொழில் கல்வியும் பொதுவாகப் பெறப்படத்தக்கனவா யிருத்தல் வேண்டும். உயர் கல்வியானது யாவருக்கும் திறமையடிப்படையின் மீது சமமான முறையில் கிடைக்கக் கூடியதாகப்படுதலும் வேண்டும்.

(2) கல்வியானது மனிதனின் ஆளுமையை முழுவதாக விருத்தி செய்யுமுகமாகவும் மனிதவுரிமைகளுக்கும் அடிப்படைச் சுதந்திரங்களுக்குமான மரியாதையை வலுப்படுத்துமுகமாகவும் ஆற்றுப்படத்தப்படல் வேண்டும். அது சகல நாடுகளுக்கிடையேயும், இன அல்லது மதக் குழுவினருக்கிடையேயும் மன ஒத்திசைவு பொறுதியுணர்வு, தோழமை ஆகியவற்றுறை மேம்படுத்தல் வேண்டு மென்பதுடன் சமாதானத்தைப் பேணுவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் முயற்சிகளை மேற்கொண்டு செல்வதற்குதவவும் வேண்டும்.

(3) தமது குழந்தைகளுக்குப் புகட்டப்பட வேண்டிய கல்வியின் வகை, தன்மையை முதலிலே தெரிந்தெடுக்குமுரிமை பெற்றோருக்குண்டு.

### உறுப்புரை — 27

(1) சமுதாயத்தின் பண்பாட்டு வாழ்க்கையிற் சுதந்திரமாகப் பங்கு கொள்வதற்கும் கலைகளைத் துய்ப்பதற்றும் அறிவியல் முன்னேற்றத்திலும் அதன் நன்மைகளிலும் பங்கெடுப்பதற்கும் எவருக்கும் உரிமையுண்டு.

(2) அறிவியல், இலக்கிய கலைப்படைபின் ஆக்கியற் கர்த்தர் என்ற வகையில் அப்படைப்புக்கள் வழியாக வரும் ஒழுக்கநெறி கருப்பொருள் நலங்களின் பாதுகாப்பிற்கு அத்தகையோர் ஒவ்வொருவரும் உரிமை உடையவராவர்.

### உறுப்புரை — 28

இப்பிரகடனத்தில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள உரிமைகளும் சுதந்திரங்களும் முழுமையாக எய்தப்படக்கூடிய சமூக, சர்வதேசிய நாட்டிடை அமைப்பு முறைக்கு ஒவ்வொருவருக்கும் உரித்துடையவராவர்.

### உறுப்புரை — 29

(1) எந்த ஒரு சமூகத்தினுள் மாத்திரமே, தத்தமது ஆளுமையின் கட்டற்ற, பூரணமான வளர்ச்சி சாத்தியமாகவிருக்குமோ அந்தச் சமூகத்தின்பால் ஒவ்வொருவருக்கும் கடமைகள் உண்டு.

(2) ஒவ்வொருவரும் அவரது உரிமைகளையும் சுதந்திரங்களையும் பிரயோகிக்கும் பொழுது இன்னொருவரின் அங்கீகாரத்தையும் மதிப்பையும் பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துக்காகவும், ஜனநாயக சமுதாயமொன்றின் ஒழுக்கசீலம், பொதுமக்கள் ஒழுங்கமைதி, பொது சேமநலன் என்பவற்றுக்கு நீதியான முறையில் தேவைப்படக் கூடியவற்றை ஏற்படுத்தல் வேண்டுமெனும் நோக்கத்திற்காகவும் மட்டுமே சட்டத்தினால் தீர்மானிக்கப்படும் வரையறைகளுக்கு மாத்திரமே கட்டுபடுபவராயமைதல் வேண்டும்.

(3) இவ்வுரிமைகளும் சுதந்திரங்களும் ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்களுக்கும் நெறிகளுக்கும் முரணான எவ்விடத்திலேனும் பிரயோகிக்கப்படலாகாது.

### உறுப்புரை — 30

இப்பிரகடனத்திலுள்ள எவையும், இதன்கண் எடுத்துக் காட்டப்பட்டுள்ள உரிமைகள், சுதந்திரங்கள் ஆகியவற்றிலுள்ள எவற்றையும் அழிக்கும் நோக்கத்தையுடைய ஏதேனும் முயற்சியில் ஈடுப்படுவதற்கும் அல்லது செயலெதனையும் புரிவதற்கும், எந்த ஒரு நாட்டுக்கோ, குழுவுக்குகோ, ஒருவருக்கோ உட்கிடையாக யாதேனும் உரிமையளிப்பதாகப் பொருள் கொள்ளப்படுதலாகாது.

UNITED NATIONS



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிச்சோலை

## சுனாமி

வித்திட்ட வாழ்வு தனியே
விதியிட்ட திட்டங்கள்
எத்தனை எத்தனை?
வாழ்க்கைக்கே உரம் ஊட்டி
வளர்த்தெடுத்த கடல் அன்னை
சீறிட்டு எழுந்தாளே- சுனாமி
எனும் பெயர் கொண்டு !

கடல் வருகிறது மக்கள்-
என்றொரு சத்தம்
திரும்பி பார்க்கையிலே
தெரியவில்லை வீதி !
சதி திட்டம் செய்ததுவோ - சுனாமி
அப்பப்பா எத்தனை அவலங்கள்
எத்தனை துயரங்கள் !

தாயை விட்டு சேயும்
சேயை விட்டு தாயும்
பிரிப்பதுதான் சுனாமியின்
இலட்சியமோ ?
உறவுதனை இழந்து
உடைமைகளை இழந்து
பரிதவிக்க நின்றானே
பாவி மனிதன் அன்று !

இவ்வேளை வந்து விட்டதாம்
சுனாமியின் நினைவாக
பதினொரு மாதங்கள்
கண்களிலே நீர் சொரிய
நெஞ்சினிலே நினைவலை பொங்க
நிற்கின்றோம் உறவையெண்ணி !
அன்றோ பரிதாபம்
இந் நிலையில் நாளை வருமாம்
நாளை மறுநாள் வருமாம் - சுனாமி என்கிறார்
வேண்டாம் வேண்டவே வேண்டாம்
மீண்டும் ஓர் சுனாமி எழவே வேண்டாம் !

☹ ☹ ☹

## விதி

அன்பு தான் வாழ்வு
அது மட்டுமா
வாழ்வின் சட்டம்
இது இப்போது மட்டுமல்ல எப்பொழுதும்
உண்மையானது
வேருன்றி விசாலமாய் வளர்ந்த
மரம் அதனை
தறித்திட நினைத்தானே - ஆம்
தறித்தே விட்டான் - மரத்தினை மட்டுமா
அதிலே கூடியிருந்த - உறவின்
விழுதுகளையுமன்றோ தறித்து விட்டான் !!!

பிறந்தோம் பாரினிலே
வாழ்ந்தோம் சிறப்புடனே - ஆனால் இன்று
இழந்தோம் முகவரியினை
வெற்றுக் காகிதமாய் கசக்கி
ஏறியப்பட்ட அகதி வாழ்க்கை
ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் - ஏனெனில்
இதுதான் விதியின் விளையாட்டன்றோ!!

☹☹☹

ஜே. ரீட்டா கிறிஜா
விபுலானந்தா மத்திய கல்லூரி – காரைதீவு

## HDO வின் கண்ணீர் காணிக்கை


*சும்மா இருந்த கடல் சுனாமியாய்*
*உருவெடுத்து*
*சுற்றத்தையும் சூழலையும் சுவைத்து*
*சுடுகாடாக்கி*
*உடைமைகளையும் உள்வாங்கி*
*உறங்கிவிட்டு*
*ஓராண்டு இன்று உருண்டு ஓடி விட்டதே!*

*கரையோரக் கீறல்கள் கனவாகக் காட்சி*
*தந்து*
*காலம் எல்லாம் கண் முன்னே கதைகள்*
*பல சொன்னாலும்*
*கடலினால் காவு கொண்டு காலன்*
*காலடியில் கரை சேர்ந்த உறவுகளுக்கு*
*கறை படிந்த நாளில் கண்ணீரை*
*காணிக்கையாக்குவோம்!*

*ஆண்டவன் பாதங்களில் அடைக்கலம்*
*புகுந்திட்ட*
*ஆயிரமாயிரம் அன்பு நிறைந்த*
*ஆன்மாக்களின்*
*ஆத்மா சாந்தி பெற ஆறாத் துயரில்*
*ஆழ்ந்திருக்கும் அனைவரும்*
*ஆண்டு தோறும் அஞ்சலிக்காக அகல்*
*விளக்கால் அணையா ஒளியேற்றுவோம்!*

☹ ☹ ☹

கே.பி.நேசன் உ.ஆசிரியர் -
விபுலானந்தா மத்திய கல்லூரி தீ காரைதீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமி மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டின் கீழ் வாழும் விதவைப்பெண்களுக்கும் ஏனைய பெண்களுக்கும் மனித அபிவிருத்தித் தாபனத்தின் வாழ்வாதார வேலைத்திட்டம்

சுனாமி ஏற்பட்டு அம்பாரை மாவட்டத்திற்கு மனித அபிவிருத்தி தாபனம் (HDO) வருகை தந்ததன் பின்னர் பல்வேறு மனிதாபிமான வேலைத் திட்டங்களைச் செய்து வருகின்றது. அவற்றுள் வாழ்வாதாரத் திட்டமும் ஒன்றாகும். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மட்டுமின்றி யுத்தத்தாலும் பாதிக்கப்பட்டு வறுமைக்கோட்டின் கீழ் வாழும் தமிழ், முஸ்லிம் கிராம மக்களுக்கு வாழ்வாதார உதவிகளை மேற்கொண்டு வருகிறது. காரைதீவு, மாளிகைக்காடு, பாண்டிருப்பு, வளத்தாப்பிட்டி போன்ற கிராமங்களில் உள்ள விதவைப் பெண்களும் ஏனைய பெண்களும் இதற்காகத் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கிடையே குழுக்கள் உருவாக்கப்பட்டது.

முதற்கட்டமாக பெண்களுக்கான சுயதொழில் விருத்தித் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இதனூடாக பெண்கள் பல்வேறு சுயதொழில்களை ஆரம்பித்து செய்து வருகின்றனர். கடைவியாபாரம், கோழி வளர்ப்பு, மாடு வளர்ப்பு, விவசாயம், அரிசி வியாபாரம், இடியப்ப வியாபாரம், சலவைத் தொழில், சிகை அலங்காரத் தொழில், தேங்காய் வியாபாரம், சிற்றுண்டி வியாபாரம் போன்றனவாகும்.


தமது தொழிலின் வருமானத்தில் ஒரு சிறுதொகையை சேமிப்பாக தமது குழுக்களுக்கிடையே வாராவாரம் சேமித்து வருகின்றனர். இது ஒரு தொகைப்பணமாக மாறுகின்ற போது நிறுவனத்தால் வழங்கப்படும் உதவிப்பணக் கொடுப்பனவு நிறுத்தப்படுகின்ற போது இச்சேமிப்பில் உள்ள பணத்தைக் கொண்டு தாங்கள் ஒரு சுயமான குழுவாக செயற்பட்டு தங்களுடைய சுயதொழில் வேலைகளுக்கு இப்பணத்தை தங்கள் குழுவில் இருந்து கடனாகப் பெற்று சுயதொழிலை செய்வதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்படுகின்றது.

இவர்களின் தொழில் முன்னேற்றத்தை அவதானித்ததன் பின்னர் மேலும் அவர்களின் தொழிலை விருத்தி செய்வதற்கான தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மனித அபிவிருத்தித் தாபனத்தின் இத்தகைய செயற்றிட்டங்கள் ஊடாக பெண்கள் கண்காணிப்பகத்தைச் சேர்ந்த பெண்கள் தமது அன்றாட வாழ்க்கையை பொருளாதாரச் சிக்கல்களின்றி சுயமாகவே முன்னெடுத்துச் செல்வதை அவர்களின் கருத்துக்கள் உறுதிப்படுத்துகின்றன.

என். உசாந்தினி

(HDO) காரைதீவு.



## ... சுனாமியின் பின்னர் HDO வின் மனிதாபிமானப் பணிகள் ...

மனித அபிவிருத்தித் தாபனம் தனது செயற்றிட்டங்களை அபிவிருத்தி, மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானப்பணிகள் எனப் பல்வேறு கட்டங்களின் கீழ் வகுத்து பெருந்தோட்ட மற்றும் கிராமிய அடிமட்ட மக்கள் மற்றும் பல்வேறு காரணங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக செயற்படுத்தி வரும் நிறுவனமாகும். நிலையான அபிவிருத்தியோடு மாற்றத்திற்கான சமூகத்தை உருவாக்க வேண்டிய இலக்கோடு செல்லும் போது மக்களின் பங்களிப்பு மிக மிக இன்றியமையாததாகும்.
இலங்கையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் போது மனித அபிவிருத்தித் தாபனம் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக அம்பாரை மாவட்டத்தின் காரைதீவு பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப்பணிகள் மற்றும் மீள் கட்டமைப்பு மனிதாபிமான செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

HDO இப்பணிகளை மேற்கொள்ள வேண்டியது காலோசிதமானதாக இருந்த போதிலும் அப்பிரதேச மக்களின் பலத்த வேண்டுகோள்கள் கிழக்கு மாகாணத்தை நோக்கிய HDO வின் வருகைக்கு மேலும் உரமூட்டின.

பிரதேசவாசிகளின் உதவியோடு சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை இனங்கண்டு பின்பு மனித அபிவிருத்தித் தாபனம் கீழ் குறிப்பிடப்பட்ட மனிதாபிமானப் பணிகளைத் தொடர்ந்தது.

- அகதிமுகாம்களில் தங்கியிருந்த மக்களுக்கான மருத்துவ சேவைகளை முகாம்களுடாக வழங்கியது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சிறுவர்களுக்கான தற்காலிக சிறுவர் பாடசாலைகள் ஆரம்பித்தமை.
- அன்றாட அத்தியவசியப் பொருட்கள் வழங்கியமை.
- பாடசாலைகளில் அகதிகளாக இருந்த மக்களுக்காக தனியான இடத்தில் தொடர் அகதிமுகாம் அமைத்து பாதிக்கப்பட்ட மக்களை குடியமர்த்தியது.
- முகாம்கள் தவிர்ந்த 260 தனியான இடங்களில் தனித்தனி தற்காலிகக் கொட்டகைகள் அமைத்துக் கொடுத்ததுடன் அகதிகளாக வாழ்ந்த மக்களை மீளக்குடியமர்த்தியது.
- முகாம்களில் தங்கியிருந்த மக்களுக்கு தேவையான சமயலறை உபகரணங்கள், வீட்டுத் தளபாடங்கள், 6 மாத காலத்திற்கான உலர் உணவு வழங்கி பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்து வந்தமை.
- சுனாமியால் முற்றாக பாதிக்கப்பட்ட விபுலானந்தா மத்திய கல்லூரிக்கு 16 தற்காலிக வகுப்பறை கட்டிடங்கள் அமைத்து கொடுத்து பாடசாலையை மீண்டும் ஆரம்பிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டமை.
- சுனாமியால் முற்றாக பாதிக்கப்பட்ட காரைதீவு வைத்தியசாலைக்கு சிறுவர் விடுதி அமைத்து கொடுத்தமை.
- தங்களின் அன்றாட வாழ்க்கையை சுயமாக முன்னெடுத்துச் செல்லுவதற்காக சுமார் 500 குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவி பணம் கொடுக்கப்பட்டமை.
- சுனாமியால் மனநிலை பாதிக்கப்பட்ட மக்களுக்காக கலை நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டமை.

மேற்குறிப்பிடப்பட்ட வேலைகளை உடனடியாக செய்து வந்தோம்.

எம்.ஐ.றியால

(HDO) காரைதீவு.



## உலகிலுள்ள மிகப் பெரியவைகள்

- வீதி – அவுஸ்ரேலியாவின் சிட்னி துறைமுகப் பாலம்
- மணி – மொஸ்கோவின் ர்ஆவுமணி
- பாலம் – சன் பிரான்சிஸ்கோ
- கால்வாய் – ருளுளுசு. ஸ்ரேலின் கால்வாய்
- தேவாலயம் – ரோமின் சென்பீட்டஸ் தேவாலயம்
- நகரம் – பிரிட்டனின் லண்டன் மா நகரம்
- நாடு – தென் அமெரிக்காவின் பிறேசில்
- நூலகம் – மொஸ்கோவின் லெனின் நூலகம்
- சமவெளி – சைப்பிரசு
- பூ ங்கா – கனடா
- சமுத்திரம் – பசுபிக் சமுத்திரம்
- அகலமான நதி – அமேசன்
- கடல் – மலாய்
- நூதனசாலை – லண்டனின் பிரித்தானிய நூதனசாலை
- அரண்மனை – உரோமாபுரியின் வத்திக்கான் அரண்மனை
- கண்டம் – ஆசியாக் கண்டம்
- தீவு – கிறீன்லாந்து
- மலைச்சிகரம் – எவரெஸ்ட் (நேபாளம் 8848 அ உயரம்)
- குகை – ஜப்பானின் பனாகுகை
- பாலைவனம் – சகாராப் பாலைவனம்
- சுவர் – சீனப்பெருஞ்சுவர்
- பரந்த கடல் – மத்திய தரைக்கடல்
- நீண்ட நதி – நைல் நதி
- பறவை – ஒஸ்ட்றிச்
- ஆழமானகடல் – மின்போனா
- நீர்வீழ்ச்சி – வெனிசுலாவிலுள்ள ஏஞ்சல் நீர் வீழ்ச்சி (உயரம் 3212அடி)

தொகுப்பு:
எம்.எச். ஜன்னத்துல்வதுறியா
(HDO) முன்பள்ளி ஆசிரியர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்று தனியும் இந்த?

நீதி காக்கும் நீதி
தேவதையே !
எலலோருக்கும் சம நீதி
என்றாயே!
ஆனால்......

இலங்கை நாட்டில்
தமிழனுக்கு
ஒரு நீதி
மற்றவனுக்கு ஒரு நீதி
என்று தானே
சுதந்திரம் பெற்ற
நாள் தொடக்கம்!
இன்று வரை இருக்கு
எனவே

என்று தனியும் இந்த ?



### மனித அபிவிருத்தித் தாபனம்

மலையக மக்களின் மனித உரிமை, மனித கௌரவம், நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி, மற்றும் சமாதான சகவாழ்வு என்பவற்றுக்காக அம்மக்களுடன் இணைந்து அவர்களின் பங்களிப்புடன் செயற்பட்டு வருகின்றோம். அதேவேளை எமது கடந்த கால அனுபவங்களும் செயற்றிறனும், நாடாளாவிய தேசிய வேலைத்திட்டங்களிலும் குறிப்பாக சமாதானம், மனித உரிமை, மனிதாபிமான சேவைகள் குறித்தும் எம்மை நகரச்செய்துள்ளன. அவற்றோடு நிற்காமல், இன்று சர்வதேச, பிராந்திய அமைப்புகளுடனும் இணைந்து நிற்கின்றோம்.

இது எமது அனுபவங்களையும், சவால்களையும், உங்கள் முன்வைப்பதற்கான ஒரு முயற்சியே. என்றாலும் உங்களின் கருத்துக்களுக்கும் ஆக்கங்களுக்கும் ***விழிப்பு*** ஒரு மேடை, உங்களின் ஆக்கத்திறனை எதிர்ப்பார்க்கின்றோம்.

*விழிப்பு*
Editor, Vilippu P.O. Box 171, Kandy 20000.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org